**காவல் கண்காணிப்பாளர், தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் அவர்களின் செயல்முறை ஆணைகள்**

**பிறப்பிப்பவர்: திரு. ஆஷிஸ் ராவத், இ.கா.ப.,**

மா.ஆணை எண்-819/2024 நாள்:30 .07.2024

ந.க.எண்-ப்பி2/4504/2024-1

குறுந்தலைப்பு - காவல் - தஞ்சாவூர் மாவட்டம் -திரு.சு.விஜய சங்கர், மாவட்ட காவல் அலுவலகம் என்பவரின் இளநிலை உதவியாளர் பதவியினை பணி வரன்முறை செய்து ஆணையிடுதல் - தொடர்பாக.

படிக்க -

1) இவ்வலுவலக மாவட்ட ஆணை எண்.971/2005 - ந.க.எண். ப்பி.2/27172/2005, நாள் 05.09.2005.
2) இவ்வலுவலக மாவட்ட ஆணை எண்.448/2016 - ந.க.எண். ப்பி.2/10746/2005, நாள் 12.05.2016.
3) அரசாணை(2D) எண்-460 உள்(காவல்-15)துறை நாள் 18.11.2023.
4) தலைமை அலுவலக குறிப்பாணை ந.க.எண்-1799852/சி.ஏ.ஆ.ர்/2023 நாள் 07.12.2023.
5) இவ்வலுவலக மாவட்ட ஆணை எண்-148/2024 நாள்-22.02.2024

<<<>>>

**ஆணை:**

திரு.சு.விஜய சங்கர், இளநிலை உதவியாளர் என்பவர் தலைமை அலுவலக குறிப்பாணை ந.க.எண்.1433/சி.ஏ.1/2005, நாள் 13.07.2005- ன் படி, பார்வை 1ல் கண்ட இவ்வலுவலக ஆணையின்படி கருணை அடிப்படையில் கணினி விவர பதிவாளராக தஞ்சாவூர் மாவட்டத்தில் 08.09.2005 முற்பகல் தற்காலிகமாக பணிநியமனம் செய்யப்பட்டுள்ளார். பார்வை 2 ல் கண்ட இவ்வலுவலக ஆணையின்படி அன்னாரது கணினி விவர பதிவாளர் பதவியானது 01.05.2007 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்யப்பட்டுள்ளது. மேலும் 30.09.2019 மு.ப இளநிலை உதவியாளராக பதவி உயர்வு பெற்று பணிபுரிந்து வருகிறார்.

2) இந்நிலையில் பார்வை-3ல் கண்ட அரசாணையில், காவல்துறையில் பணிபுரிந்து மறைந்த அரசு பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு கருணையடிப்படையில் கணினி விவர பதிவாளராக பணிநியமனம் செய்யப்பட்டு, பணிமாறுதலில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வரும் மேற்படி தனியரின் கணினி விவர பதிவாளர் பதவியானது, உரிய விதிகளுக்கு விலக்கு ஏதும் பெறப்படாமல் பணிநியமன அலுவலரால் (காவல் கண்காணிப்பாளர், தஞ்சாவூர் மாவட்டம்) பணி வரன்முறை செய்யப்பட்டுள்ளது என்றும், இதனை ரத்து செய்யவும் மேலும் மேற்படி தனியரின் கருணையடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்ட கணினி விவர பதிவாளர் பதவியினை கீழ்கண்டவாறு விதித்தளர்வு செய்து, அப்பணியிடத்திற்கு தேவையான உடற்த்தகுதியினை பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் 01.05.2007 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து ஆணையிடப்பட்டுள்ளது.

CamScanner

| வ. எண் | பெயர், தற்போது வகிக்கும் பதவி மற்றும் பணிநியமனம் செய்யப்பட்ட நாள் | கோரப்பட்ட விதி விலக்கு விவரம் | பணிநியமன நாளன்று நடைமுறையிலிருந்த தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலைப் பணிகளுக்கான பொது விதிகளில், தளர்வு செய்ய வேண்டிய விதிகள் |
|---|---|---|---|
| 1. | திரு.சு.விஜய சங்கர், இளநிலை உதவியாளர்<br><br>க.வி.ப - 08.09.2005<br>இ.நி.உ - 30.09.2019 | குறும வயது (ம) காலம் கடந்த விண்ணப்பம்<br><br>த.நா.அ.ப.(பநி).சட்டம், 2016, பிரிவு 15, பிரிவு 20(6)(b) குறும வயது பிரிவு 28(2)<br><br>அரசாணை (நிலை) எண்.18, தொ.(ம).வே. வா துறை நாள் 23.01.2020 | குறும வயது (ம) காலம் கடந்த விண்ணப்பம் குறித்து விதி 12 (bbb) மற்றும் பணபலன்கள் பெற விதி 23(a)(ii)<br><br>அரசாணை (நிலை) எண்.18, தொ.(ம).வே. வா துறை நாள் 23.01.2020- னை தளர்வு செய்யப்படுகிறது. |

3) எனவே பார்வை-2-ல் கண்ட இவ்வலுவலக ஆணை ரத்து செய்யப்பட்டு பார்வை-3-ல் கண்ட அரசாணையின்படி திரு.சு.விஜய சங்கர், என்பவருக்கு கருணையடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்ட கணினி விவர பதிவாளர் பதவியினை உரிய விதித்தளர்வு செய்யப்பட்டு 01.05.2007 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து ஆணையிடப்பட்டுள்ளது.

4) திரு.சு.விஜய சங்கர், இளநிலை உதவியாளர் என்பவருக்கு கருணை அடிப்படையில் கணினி விவர பதிவாளராக பணியமர்த்தப்பட்டு அப்பதவியில் எற்கனவே அரசிடமிருந்து விதித்தளர்வு பெற்று பணி வரன்முறை செய்யப்பட்டுள்ளது. எனவே அன்னாருக்கு இளநிலை உதவியாளர் பதவியில் 30.09.2019 மு.ப முதல் பணிவரன்முறைப்படுத்தி ஆணையிடப்படுகிறது.

5) இச்செயல்முறை ஆணை பெற்றுக்கொண்டமைக்கு ஒப்புதல் அளிக்கவும்.

ஒம்/-ஆஷிஸ் ராவத்
காவல் கண்காணிப்பாளர்,
தஞ்சாவூர் மாவட்டம்

<u>பெறுநர்</u>

திரு.சு.விஜய சங்கர், இளநிலை உதவியாளர், மாவட்ட காவல் அலுவலகம், தஞ்சாவூர்.

<u>நகல்</u>

காவல் துறை தலைமை இயக்குநர், தமிழ்நாடு, சென்னை-4.
A4, P1, P4, N1, S1, D1 மற்றும் D2, உதவியாளர் / இளநிலை உதவியாளர்,
மாவட்ட காவல் அலுவலகம், தஞ்சாவூர்
ஆணைப்புத்தகம் மற்றும் உதிரி.

//உத்தரவின்படி//

31.7.24
நிருவாக அலுவலர்
31/7/24

CamScanner